**சமுர்த்தி நிதியம் - 2017**

சமுர்த்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக **(ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810)** இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை சமுர்த்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

நியம இலக்கம் 03 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் கொடுக்கல் வாங்கல்கள், வேறு நிகழ்வுகள் மற்றும் சந்தர்ப்பங்கள் என்பன அவை இடம்பெற்ற குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். எனினும், சமுர்த்தி சமூக வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்கள் பேணப்பட்டு வரும் 1286 கட்டிடங்களுக்கான பெறவேண்டிய வாடகை வருமானம் ரூபா 15,432,000 நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்குப் பதிலாக தேறிய உள்ளபடியான வருமானம் ரூபா 7,507,000 மட்டுமே நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கை

நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கை குறிப்பு (i) இன் கீழ் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கடந்த இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்ட போதிலும் குறிப்பு இலக்கம் (iv) இன் கீழ் சமுர்த்தி வங்கி / வங்கிச் சங்கங்களின் கட்டிட வாடகையாக வருடாந்தம் அறவிடப்படுகின்ற தொகை , தேறிய உள்ளபடியான வருமானத் தொகையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது.

#### 2.2.3 கணக்காய்விற்கான சாட்சிகள் இல்லாமை

கூட்டுத்தொகை ரூபா 25,075,971 ஆன 3 கணக்கு விடயங்களுக்கான விபரப்பட்டியல் மற்றும் நிலுவை உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்கு

2014 ஆம் வருடத்தில் தேசத்தின் மகுடம் நிகழ்ச்சித்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட 03 மாவட்டங்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக திறைசேரியினால் மீள் நிரப்புதல் அடிப்படையில் வழங்கப்பட்ட ரூபா 212,000,000 ஆன கடன் தொகையொன்று திறைசேரியின் அங்கீகாரமின்றி நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2018 சனவரி 02 ஆந் திகதிய BD/RDS/331/01/01 கடிதத்தில் அக்கொடுப்பனவு தொடர்பாக திறைசேரியின் எழுத்து மூலமான அங்கீகாரமொன்று வழங்கப்பட்டிராமையால் இத்தொகை மீள் நிரப்பப்படுவதற்கான இயலுமையொன்று இல்லையென்பதாக தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களப் பணிப்பாளரினால் குறிப்பிடப்பட்டு அனுப்பப்பட்டிருந்தது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

மாதிரிக் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச மக்கள் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 395 பிரகாரம் | 2017 திசெம்பர் மாத வங்கி இணக்கக் கூற்றில் வைப்புச் செய்யப்பட்டும் ஆனால் வசூலிக்கப்படாத ரூபா 72,000 ஆன 8 காசோலைகள் 11 மாதங்கள் தொடக்கம் 16 மாதங்கள் கடந்து விட்ட போதிலும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியின் முலம் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிப்பிரமாணம் 876(3) பிரகாரம் | நியதிச் சட்டமல்லாத நிதியமொன்று தொடர்ந்தும் பேணப்பட்டு வருவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பின் அவ்வாறான நிதியங்கள் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் சட்டபூர்வமாக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கூறப்பட்ட போதிலும் நிதியத்தை சட்டரீதியாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவு ரூபா 127,501,983 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 114,506,350 ஆக இருந்தமையால் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 242,008,333 ஆன பின்னடைவொன்று காணப்பட்டது. இப்பின்னடைவிற்கு ஹாரகம நீர்ச் செயற்திட்ட மேம்படுத்தல் செயற்திட்டத்திற் ரூபா 300 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

குண்டசாலை ஹாரகம நீர் வழங்கல் முறைமை மேம்படுத்தல் குறுகிய காலத்தீர்வுக்காக 2017 நவம்பர் மாதம் ரூபா 300 மில்லியன் தொகையொன்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் சபையுடன் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிரக்கவில்லை. கண்டி மாவட்டத்தில் பாத்த ஹேவஹெட்ட , கண்டி குண்டசாலை (செங்கடகல) போன்ற பிரதேசச் செயலகப் பிரிவுகளுக்கு உட்பட்ட 14 கிராமங்களில் 6000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ள நீர் பிரச்சினைகளுக்குத் தீர்வாக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 சனவரி 25

வரையில் இத்திட்டத்தின் மூலம் அனுராகமப் பிரதேசத்தில் உள்ள 428 குடும்பங்களுக்கு அதாவது 7 சதவீதத்திற்கு மட்டுமே நேரடி நீர் விநியோகம் வழங்கப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2020 திசெம்பர் 31 இல் பெற வேண்டிய தொகையில் உள்ளடக்கப்பட்டுள்ள மொத்தம் ரூபா 17,147,844 ஆனது விவசாய, மீன்பிடி மற்றும் வேளாண்மைக் கட்டுப்பாட்டுச் செயற்திட்டத்திற்காக சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2007 வரையில் திறைசேரி ஒதுக்கங்களின் அடிப்படையில் சமுர்த்தி அதிகார சபையினால் மீண்டும் அறவிடப்படும் அடிப்படையில் பயனாளிகளுக்கு சுழற்சி முறையில் வழங்கப்பட்டிருந்த கடன் களின் பெற வேண்டிய றொமதி ஆகும். இக் கடன் அறவீடுகள் 2007 யூலை 16 ஆந் திகதிய ச/அடி/10/ஜாச.கம்/ சுழலும் நிதியம் ஆம் இலக்க சமுர்த்தி பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் பிரதேசச் செயலக அலுவலகங்களில் ''கம் புபுது வாழ்வாதாரச் சுழற்சி'' கணக்கிற்கு செலவு வைப்பதற்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரையில் அறிக்கை சமர்ப்பித்தல் அல்லது பணம் தீர்க்கப்படுதல் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) நிதியத்தின் நோக்கமான சமூக அடிப்படையிலான வங்கிகள்/வங்கிச் சங்கங்களை ஸ்தாபிப்பதற்குத் தேவையான நிதி வசதிகளை வழங்குவதறகாக திவிநெகும சமூக அடிப்படையிலான வங்கிகள்/வங்கிச் சங்கங்களின் கட்டிட வாடகைகளைப் பெற்றுக் கொள்ளல் , அந்த வங்கிகள்/வங்கிச் சங்கங்களின் கட்டிடங்களைப் பராமரிப்பதற்கு , நவீன மயமாக்குவதற்கு மற்றும் புதிய கட்டிடங்களை ஆரம்பிப்பதற்கு திறைசேரி ஏற்பாடுகளைத் தவிர தேவையான நிதிப் பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தகாகக் கூறப்பட்டிருந்த போதிலும் 2017 யூன் 9 ஆந் திகதிய சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கிகள் சுற்றறிக்கை இலக்கம் 2017/7 கொண்ட பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை பிரகாரம் இந்நிதியத்திற்கு இற்றை வரையில் செலவு வைக்கப்பட்டுள்ள கட்டிட வாடகை சமுர்த்தி நிதியத்திற்கு செலவு வைக்காது இருக்குமாறு 2017 ஆம் வருடத்திலிருந்து சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களினால் அத்தொகை தமது ''வங்கிக் கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதியக் கணக்கு '' இற்கு செலவு வைக்குமாறு உரிய கணக்குக் குறிப்ப வைக்கப்பட வேண்டிய முறைமையொன்று குறிப்பிடப்பட்டு சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்நிதியம் உருவாக்கப்பட்டதற்கான நோக்கம் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் தொடர்பான சர்ச்சையான நிலைமையொன்று ஏற்பட்டிருந்தமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது. இத்தீர்மானத்திற்கு உடன்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டிற்காக 1286 சமூக அடிப்படையிலான வங்கிகள்/வங்கிச் சங்கங்களில் பெறப்பட வேண்டிய வாடகை வருமானம் ரூபா 15,432,000 ஆக இருந்த போதிலும் பெற்ற வருமானம் ரூபா 7,507,000 மட்டுமே ஆகும்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதத்திற்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் , 2019 ஏப்ரல் மாதத்திலும் திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2021 நவம்பர் யூலை 08 ஆந் திகதியும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தி மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1) பிரகாரம் நிதியத்தின் அலுவல்கள் சம்பந்தமாக வரவு செலவுத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

நிதியம் சட்டரீதியாக்கப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்படுவதுடன் புத்தகங்கள் மற்றும் பதிவுகளை முறையான வகையில் பேணுவதுடன் முறையாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கான விசேட அவதானம் வேண்டப்படுகின்றது.